# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ ஐப்பசி 1980 ★ இதழ் - 58


## தமிழ் வளர்த்த வண. தனிநாயக அடிகள்

முத்தமிழ் வித்தகர்
விபுலானந்த அடிகளாரைப் போல
உலக வாழ்க்கையைத் துறந்தும்
தமிழ்ப்பற்றைத் துறக்காமல்,
வாழ்ந்த

### தனிநாயக அடிகள்

தமது அறுபத்தேழாம்
ஆண்டகவையில் மறைந்துவிட்டார்.

பசுத்தீவு என்னும் பழம்பெயர்வாய்ந்த நெடுந்தீவிலே பழங்குடிமரபில் 2-8-1913இல் தோன்றிய இவர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் புனித பற்றிக்ஸ் கல்லூரியிலும் கல்வி கற்ருர் என்பர். இவர் கேம்பிரிட்ஜ் சீனியர் என்னும் பரீட்சையில் திறமையுடன் சித்தி பெற்றபின் கொழும்புக்குச் சென்று குரு மடப் பயிற்சிக் கழகத்தில் நான்காண்டுகள் பயிற்சிபெற்றுக் குருவானுர்.

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)



வேலணையில் நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டில் வண. தனிநாயக அடிகளார் மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்களின் கையைப் பிடித்தவாறு மேடையை நோக்கி வந்தமை.

★ சன்மார்க்கம் மனதை உறுதிப்படுத்தவல்லது ★

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## திருநாவுக்கரசுநாயனர் தேவாரம்

### திருவொற்றியூர்
### திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

ஒற்றி யூரு மொளிமதி பாம்பினை
ஒற்றி யூருமப் பாம்பும் அதனையே
ஒற்றி யூர வொருசடை வைத்தவன்
ஒற்றி யூர்தொழ நம்வினை யோயுமே.

திருச்சிற்றம்பலம்

ஒளிவிளங்குகின்ற சந்திரன் பாம்பினை ஒற்றியூரும். பாம்பும் அச்சந்திரனைக் கொள்வதற்காக ஒற்றியூரும். இவ்வாருக இவையிரண்டும் ஒன்றையொன்று ஒற்றி யூரும்படியாகத் தமது ஒருசடையிலே வைத்தருளிய சிவ பெருமானுக்குரிய திருவொற்றியூரைத் தொழுவதனுல் நமது வினைகள் வேகங்குறைந்து ஓய்ந்துவிடும்.

## திருவொற்றியூரர்

திருவொற்றியூரில் எழுந்தருளிய இறைவன்உமாதேவி யார் வருத்தமுற இடுகாட்டில் இருளில் நடனமாடுவார். அவர் பேய்கள் நெருங்க நரிகள் கடிக்கின்ற தலையோட்டி னைத் திருக்கரத்திலே ஏந்தி ஆடுவர். அறத்தினுல் அனைத்தை யும் இயக்குபவராகிய சிவபெருமான் திருநீற்றை நிறையப் பூசியவர். வணங்குபவர்களுக்கு கரும்புபோல இனிப்ப வர். எல்லா ஊர்களிலும் பலியேற்கும் இறைவன் திரு வொற்றியூரில் திருநடனஞ் செய்தருளுவர். கொடிய பாம்புகளை ஆட்டவல்ல சிவபெருமான் உமாதேவியா ரோடு இடப வாகனத்தில் ஏறிவருபவர். வேதங்களை விரித்தவரும் வேதப்பொருளாயுள்ளவருமான இறைவ னைப் பூவும், நீரும் கொண்டு தொழப் பாவங்களை நீக்கியரு ளுவர். சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருவொற்றி யூரில் அன்னங்களும் மயில்களும் அதிகமாகவுள்ளன. திரு வொற்றியூரர் இடபத்தில் ஏறியவர், இயமனை உதைத்தவர் சந்திரனைச் சூடியவர், பூதப்படையுடையவர், வேதகீதம் பாடுபவர், கங்கையைச் சடையில் வைத்தவர், சந்தமெனத் திருநீறு பூசியவர், யானைத்தோலை ஆடையாக அணிந்த வர், திருவொற்றியூரை அடைபவர் வினைகளை நீக்குபவர். மலைபோன்ற தோள்களையுடைய இராவணனை வலியடக் கியவர். அவரை வாயார வாழ்த்தியவர் உயர்ந்தவரா வர்.




## பெருமை

### பெரியாரது தன்மை

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து".

பெரியோர்கள் எக்காலத்தும் பணிவுடையோர்களா யிருப்பார்கள். சிறியோர்கள் தம்மை வியந்து தம் பெருமை பாராட்டுவர்.

### GREATNESS

Greatness is always modest, littleness exults, in self - praise.

## ஒக்ரோபர் மாத நிகழ்ச்சிகள் 1980

| | | | |
|---|---|---|---|
| 2. | வியாழன் | = | காந்தியடிகள் பிறந்த தினம் |
| 4. | சனி | = | ஏகாதசி விரதம் |
| 6. | திங்கள் | = | பிரதோஷ விரதம் |
| 8. | புதன் | = | அமாவாசை விரதம் |
| 9, | வியாழன் | = | நவராத்திரி ஆரம்பம் |
| 18. | சனி | = | மகாநவமி சரஸ்வதி பூசை |
| 19. | ஞாயிறு | = | விஜயதசமி |
| 20. | திங்கள் | = | ஏகாதசி விரதம் |
| 21. | செவ்வாய் | = | பிரதோஷ விரதம் |
| 23. | வியாழன் | = | பூரணை விரதம் |
| 25. | சனி | = | கார்த்திகை விரதம் |

## சமய எழுச்சி

நாட்டில் மாவட்டந் தோறும் சைவசமய எழுச்சி நல்ல முறையில் நடைபெறுவதைப் பாராட்டாமல் விட முடியாது. கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் வாளைச்சேனைக் கடதாசி ஆலை ஊழியர் அயலில் உள்ள சித்திவிநாயகர் ஆலயத்தில் ஆண்டு தோறும் உற்சவம் நிகழ்த்தி அன்னதானமும் செய்துவரும் அரும்பணியைப் போற்றுகிறோம். இவர்கள் வயிற்றுக்கு ஈவதோடு செவிக் கும் உணவாக அறிவாளிகளைக் கொண்டு பேசுவிக்கின் றனர். வாழ்க இவர்கள்! வளர்க இவர் தம் பணி!!

★ ஐம்பொறிகளை ஒதுக்கிவிட்டால் இறைவனோடு பேசலாம் ★

## அருள் விருந்து

ஆதாரம்: தர்மசக்கரம்

மனம் ஒடுங்குவதால் அருட்பேறு ஓங்குகிறது.
நம்பிக்கைக்கு நிகரான ஆயுதம் இல்லை.
மெய்ம்மையைக் கடைப்பிடித்தால் பொய்ம்மை அகலும்.
உயர்வு தாழ்வு பாராட்டுவது அகங்காரத்தின் செயல்.
அறநெறியைப் பின்பற்றிஞல் ஆக்கம் தானேவரும்,
அடக்கத்துக்கு மேலான தவம் இல்லை.
தொண்டு புரிபவன் உலகுக்குத் தோழனுகின்ருன்.
தூய எண்ணம் உள்ளத்தை உறுதிப்படுத்துகிறது.
மனிதன் நல்லவனுஞல் உலகமும் நல்லதாகும்.
பெரியவர்களைப் பணியாதவன் காட்டுமிருகம்.
நல்லவனுடைய எண்ணம் வீண்போவதில்லை.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழ் வளர்த்த........

பின்னர் தமது நெறியில் மேற்படிப்புக்காக உரோமா புரிக்குச் சென்று மீண்டு தமிழ்நாட்டில் வடக்கன் குளத் தடிப் புனித திரேசா கல்லூரியிற் பணியாற்றியபோது குருசாமிப் பண்டிதர் என்பாரிடம் நன்ருகத் தமிழ் பயின்று அண்ணுமலைப் பல்கலைக்கழகம் புகுந்து பட்ட மும் பெற்ருர்.

கப்பலோட்டிய தமிழன் சிதம்பரப்பிள்ளை அவர்க ளாலும், சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய நூல்களுக்குப் பேருரை எழுதிய முத்தையாபிள்ளை அவர் களாலும் சிறப்புப் பெற்ற தூத்துக்குடியில் தனிநாயக அடிகள் தமிழ்ப்பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்தது.

தமிழ் வளர்க்கத் துணிந்த இவர் அதனை உலகமெல் லாம் பரவும் வகை செய்வதற்காகத் தமிழர் கலாசாரம் *Tamil Culture* என்னும் முத்திங்கள் ஏட்டினை நல்ல முறையாக அச்சிட்டு வெளியிட்டுவந்தார். இந்து ஆசிய கலாசாரம் *Indo - Asian Culture* என்னும் முத் திங்கள் ஏடு வெளிவருவதன்முன், தமிழர் கலாசாரத்தை வெளியிட்ட பெருமை தனிநாயக அடிகளாரின் உரிமை.

சங்கவிலக்கியங்களிலும், சைவத்திருமுறைகளிலும் அதிகமாக ஈடுபட்ட அடிகளார் அழகு, இறமை, ஆர் வம் ஆகிய நல்லியல்புகளை வெளிக்கொணர்ந்தமையை கவனிக்கும்போது இவர் முருக உபாசனையுள்ளவர் எனத் தெரிகிறது. என்னை நன்ருக இறைவன் படைத்தனன் தன்னை நன்ருகத் தமிழ்செய்யுமாறே என்று பத்தாந் திருமுறையான திருமந்திரத்தை எந்தக் கூட்டத்திலும் பேசும் இவர் சேக்கிழாரின் செய்யுள் நடையில் தமிழ் பேசுமியல்பினராயினுர்.

தமிழ்வல்ல தனிநாயக அடிகளார் 1952ஆம் ஆண்டு முதல் கொழும்பில் பல்கலைக்கழகத்திற் கல்வி டிப்ளோமா கற்போருக்குத் தமிழாசானுயிருந்தார். அதிலிருந்து லண்டன் சென்று பெரும் பட்டம் பெற்றுக் கலாநிதி யாய் மீண்டார். பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத் திற் பணியாற்றியபின் மலேசியாவுக்குச் சென்று ஆங் குள்ள பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகித் தமிழ்த் துறையை அபிவிருத்தி செய்துவந்தார்.

### உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு

தமிழ்த்தாகமுற்ற கலாநிதி அடிகளாருக்கு உலகத்தமிழ் மகாநாடொன்றைக் கூட்டித் தமிழ்த்தாய்க்குப் பெரு விழாவெடுக்க வேண்டுமென்ற வேணவா மிகுந்தது. அவருக்கு மலேசிய அரசாங்கம் தாராளமாக உதவிசெய் வதற்கு முன்வரவே, அவர் உலகமெங்குமுள்ள தமிழறி ஞர்களை, தமிழபிமானிகளை வருகைதருமாறு அன்புக்கரம் நீட்டியழைத்தார். தமிழறிந்த ஐரோப்பியர் பலர் திரண்டெழுந்த உற்சாகத்தைக் கண்டு உலகத்தலவர் அதி சயித்தனர். உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டுக்கு வித் திட்டுத் தமிழ்வல்லார் அனைவரையும் ஒன்றிணைத்த தனிப்பெருமை தனிநாயக அடிகளாருக்கே உரியதாயிற்று.

செக்கோசுலோவகியா, பிரான்ஸ், நோர்வே. இங் கிலாந்து, இத்தாலி முதலிய நாடுகளின் தமிழார்வம் பெரிது. மூவேந்தர் நாடுகளில் வடவேங்கடந் தென் குமரியிடை முன்னர் முடங்கிக்கிடந்த தமிழ் உலகவியா பகமுற்றதைத் தமிழரே கண்டு தம்மை மறந்தனர்.

தமிழ்த் தொண்டு புரிந்த பாதிரிமார்கள் வரிசையில் வீரமாமுனிவர் என்னும் பெஸ்சி, போப், கல்வெல்ட் முதலானேர் பெரும் புகழ்பெற்றவர்கள். அச்சுவேலி ஞானப்பிரகாச அடிகள் பன்மொழிப் புலமை பெற்று தமிழாராய்ச்சி செய்த வழியில் தனிநாயக அடிகளும் பன்மொழி கற்றுத் தாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணும் என்று முழக் கஞ்செய்வாராயினர்.

### முதல் தமிழ் மகாநாடு


உலகமெங்கும் ஒளிபரப்பும் ஞாயிறு முதலிற் கிழக் கில் உதித்தாற்போலத் தூரகிழக்குநாடுகளிலொன்ருன மலேசியாவில் முதல் தமிழ் மகாநாடு உதயமாயிற்று. மலாயாவின் பிரதமர் மாண்புமிகு துங்கு அப்துல் ரஹ்மான் அவர்களும், ஸ்ரீ மாணிக்கவாசகம், ஸ்ரீ சம்பந்தம் முத லான கௌரவ மந்திரிமார்களும், மலேசியாத் தமிழறிஞர் களும் தமிழ் மகாநாட்டை நன்ருக நடத்தினர். மலே சியாவிலமர்ந்த பிறநாட்டுத் தூதரகங்கள் தத்தம் நாடு களிலிருந்து வந்தவர்க்கான வசதிகளைச் செய்துகொடுத் தனர்.

தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான யாவா, சுமத்திரா, கம்போடியா, தாய்லாந்து, பாலி, மதுரா, நியூகயனு முதலிய நாடுகளில் வாழும் பழங்குடிச் சைவத் தமிழ் மக்கள் பலர் தங்கள் ஆயிரமாண்டு அழியாமல் நிலைத்துவந்த உறவை உறுதிப்படுத்திக்கொண்டார்கள்.

முதல் மகாநாட்டிற்கு 25 நாடுகளிலிருந்து 180 அறி ஞர்களும், ஆயிரக்கணக்கான பார்வையாளர்களும் வந்து கூடினர். யார் யார் வந்தார் தமிழ் விழாக் காண என்று கேட்பின், சுவிட் சலாந்தினர், யப்பானியர், அமெரிக்கர், யேமனியர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், செக்நாட்டி னர், இந்தியர், இலங்கையர் இன்னும் பலர் அங்கே வந் தார்கள் என்பர், அவர்கள் 22 ஆராய்ச்சிக் கட்டுரை கள் சமர்ப்பித்திருந்தார்கள்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

★ இறைவனிடத்தில் பதித்த மனசில் மாசு நீங்குகிறது ★



## பஞ்சதந்திரம்

சாதிக்கமுடியாத காரியத்தை நண்பர்களைக்கொண்டு ஒருவன் சாதிக்கமுடியும். ஆகவே நண்பர்களைத் தேடிக் கொள்வதோடு அவர்களைச் சமமாக நினைத்துக்கொள்ள வும் வேண்டும்,

தனக்கு வேண்டியதைத் தானே செய்துகொள்ளுந் திறமை இருந்தாலுங்கூட ஒருவனுக்கு நண்பர்கள் இருப் பது அவசியம். குறைவுபடாதபடி என்றும் நிறைவாக இருக்கிற சமுத்திரமும் மழையை எதிர்பார்க்கிறது.

தமது பரஸ்பர அந்தஸ்தின் உயர்வு தாழ்வுகளைப் பார்க்காமல் நட்புக்கொள்ளுகிறவர்கள் மூடர்கள். அவர் களை மக்கள் பரிகசிப்பர்.

செயலால் ஏற்பட்ட பகை வேறு சில செயல்களால் மறைந்துபோகிறது. ஆனல் இயல்பாயுண்டான பகை உயிர்போகிற வரைக்கும் மறைவதில்லை.

மொழியிலக்கணத்தின் தந்தையான பாணினியை ஒரு சிங்கம் கொன்றது. மீமாம்ச தத்துவ தரிசனம் அருளிய ஜைமினி முனிவரை ஒரு யானை கொன்றது. யாப்பிலக்கணத்தின் பொக்கிஷமான பிங்கள முனிவரை ஒரு முதலை கொன்றது. ஞானமில்லாத மூடமிருகங்க ளுக்கு மேதாவிகளின் குணசாதனைகள் என்ன தெரியும்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழ் வளர்த்த........

மலாயரான கலாநிதி இஸ்மாயில் ஹூசையின் திருக் குறளை மலாய் மொழியில் பெயர்த்திருந்தார். செங்ஷி என்பார் அதனைச் சீனமொழியில் பெயர்த்திருந்தார். மலாய், சீனம் என்பன மலாயாவில் பிரதான மொழி கள், மலாயாவின் தமிழார்வந்ததும்பிய செட்டிமார் திருக்குறள் வளர்ச்சிக்கு 3000டொலர் வழங்கியிருந்தனர். மலாய மொழியில் ஆயிரக்கணக்கான வடமொழிகள் கலந்திருப்பதைக்கேட்ட உலகத்தவர் இந்துநாகரிகத்தின் உயர்வையும் உலகவியாபகத்தையும் அறிந்து உவகை கொண்டனர். வடமொழியை வெகுவாக வளர்த்தவர் கள் தென்னட்டவர் என்பதை இன்னமுந்தான் தமிழர் பலர் அறியாதிருக்கிருர்கள்.

மகாநாட்டிற் பேசிய அஸ்மா என்பவர் மலாய் மொழியில் வழங்கும் தமிழ்ச்சொற்களை வரிசைப்படுத்திக் கூறியபோது கேட்டிருந்தோர் பூரித்தனர்.

## தொடர்ந்து நடைபெற்ற மகாநாடுகள்

கோலாலம்பூரில் நிகழ்ந்த விழாவின்பின் இந்தியாவில் சென்னை நகரிலும், பிரான்சில் பாரிஸ்நகரிலும், இலங்கை யில் யாழ்ப்பாணத்திலும் உலகத்தமிழ் மகாநாடுகள் நடைபெற்றன. இங்கெல்லாம் தமிழ்விழாவைக் கோலா கலமாக நடாத்திய தனிநாயக அடிகளார் ஐந்தாம் விழாவை இந்தியாவில் மதுரையில் நடத்த ஒழுங்குசெய்து வந்தார்.

தமிழ்விழாக்கள் நடாத்திய அனுபவத்தில் நரைகண்டு தளர்ந்திருந்த அடிகளாரை ஒருசமயம் யாழ்ப்பாணத் தொல்பொருள் நிலையப்பொறுப்பாளர் எம்.பி. செல்வரத் தினம் அவர்கள் கண்டு உலகத்தமிழாராய்ச்சி விழாவைப் பற்றிக் கேட்டபோது, அடிகளார் தாம் மறுவுலகத்தைப் பற்றிச் சிந்தித்திருப்பதாகக் கூறினர். அது உண்மையாய் விட்டது. மேலுலகத்தார் தங்கள் நாட்டில் விழா நடத் தக் கைவந்தவர் இவரெனக்கண்டு அழைத்துப்போயினர்.

இப்படித்தான் இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன் சுதுமலை கரோல் விசுவநாதபிள்ளை மறைந்தபோது, தமிழ் தாதா தாமோதரம்பிள்ளை அவர்கள்,

''ஆறுமுக நாவலரை அன்றழைத்தார் போதாதோ
வீறுவிஸ்வ நாதனையும் வேண்டினர் — நீறுதிகழ்
சைவந் தன்னையங்கு தாபிக்க வோவிவர்கள்
கைவந் தவர்களெனக் கண்டு''. என்று பாடினர்.

## சுவையான சம்பவங்கள், செய்திகள்

தனிநாயக அடிகள் எம்மதத்தைச் சேர்ந்தாலும், எக்கோலம் புனைந்தாலும் தமிழ் தமிழ் என்று தொண்டை கிழியக் கத்திவந்தார். அதனல் எல்லோரும் தமிழுக்காக அவரை மதித்துவந்தார்கள். அவர் வெளியிட்டுவந்த தமிழர் கலாசாரம் என்னும் முத்திங்கள் ஏட்டில் மூழ்கினல் விலையுயர்ந்த முத்துக்களைத் திரட்டிவரலாம். அவை தமிழ்க்கடல் ஈந்த தனிமுத்துக்கள்.

முன்னர் வேதகாலத்திலும் அதற்குப் பின்னரும் தமிழ் நாகரிகம் வடபுலத்துக்கு உபகரித்த கலைகள் பல. பின்னர் தென்புலத்துச் சிங்களவருக்கு உபகரித்த உயர்ந்த கலைகள் பல. தஞ்சாவூர்ச் சிற்பியரும் கம்மியரும் உப கரித்த கட்டடச் சிற்பக்கலைகளைத் தென்னிலங்கையில் இன் றும் கண்கள் குளிரத் தோள்கள் பூரிக்கக் கண்டு களிக்கலாம்.

தமிழ்நாகரிகம் கிழக்கே சீனம்வரையும், மேற்கே தென்னமெரிக்காவரையும், இடையில் உரோமாபுரி உள் ளிட்ட பிரதேசமெங்கும் பரவுவதற்குக் காரணம் தமிழர் செய்த வணிகமேயாம். உண்மை, நேர்மை, அன் புடைமை, அருளுடைமை, ஆண்மை, அறம், மரியாதை முதலிய அருங்குணங்களால் தமிழர் உலகத்தவரை நட்புக் கொண்டனர். நல்ல தமிழர்வீட்டு வேப்பங்காயும் இனிக்கும்.

தமிழர் நாகரிகத்தைப்பற்றி அறிவதற்கு நாங்கள் துடிப்பதிற்பார்க்க வெளிநாட்டார் துடிக்கின்றனர். யப் பானியர், அமெரிக்கர், தென்னமெரிக்காவில் பேரு, ஈக்கு வாடர், சில்லி, ஆஜென்ரைனு பிறேசில் நாட்டவர் வெகு

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

★ இந்திரியங்களை வென்றவன் தெய்வத்துக்குரியவனுகிறன் ★

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழ் வளர்த்த........

வாக முயற்சிசெய்கிறுர்கள். பிறநாட்டவரான வால்ரர் எலியெட், ஸ்ரோக்ஸ், எல்லீஸ், கோவர், வின்ஸ்லோ, கல்வெல்ட், போப், வில்சன் முதலானேர் தமிழுக்குத் தலை வணங்கினுர்கள்.

தனிநாயக அடிகளார் பர்மா, தாய்லாந்து, பூனன், சம்பா, கம்போடியா, மலாயா, சுமாத்திரா, யாவா, பாலி, போர்ணியோ, பிலிப்பைன்ஸ் நாடுகளின் தமிழ் நாகரிகத்தைப்பற்றி எழுதியுள்ளார். அங்கெல்லாம் பெலியட், மாஸ்பரோ, பாமன்னியர், றீமுசாத், பினெற், ஸ்ரேண், ஜோர்ஜ் கோடிஸ், குரேம், ஸ்ரட்ட ஹீம், மூஸ், கெல்டேன், குவாறிச், பிறிக் முதலிய அறிஞர்கள் எழுதிய ஆராய்வுகளை நாம் படித்தல்வேண்டும் என்பர்.

தென்கிழக்காசிய நாடுகளில் திருவெம்பாவை, திருப் பாவை, திருப்பல்லாண்டு படிக்கும் வைபவங்களையும் சடங்குகளையும், உற்சவங்களையும் அறிந்து தமிழர் பெருமைப்படவேண்டும் என்பர். சம்பாநாட்டின் கோயில் திராவிடக்கலை ததும்பும் கட்டடமாகும் என்பர். தாய் லாந்தில் அரண்மனைப் புரோகிதரைக் கண்டு அவர்கள் பாடும் முடிசூட்டுவிழாப் பாடல்களைப் பாடக்கேட்டும் ஊஞ்சற் பாட்டைக் கேட்டும் உவகைகொண்டார். அரண் மனைப் பிரதம குருவை அங்குள்ளவர் மகாராஜகுரு என வழங்குகிறுர்கள் என்பர். இப்பரம்பரை தென்தமிழ் நாட்டு இராமேஸ்வரத்தைச் சேர்ந்தது என்பர்.

எங்கள் யாழ்ப்பாணத்து ஆரிய சக்கரவர்த்திகள் இராமேஸ்வரத்தைப் பரிபாலித்ததும் உண்டு.

## தனிநாயக அடிகளின் விருப்பமும் வேணவாவும்

தனிநாயக அடிகளின் பெருவிருப்பமொன்று எங்கள் இளம் சந்ததியினர் தமிழோடு வேறொரு மொழியையாதல் கற்றுப் பாண்டித்தியம் பெறுதல்வேண்டும் என்பதாம். எம் முந்தையோர் உபகரித்த இலக்கியச் செல்வங்களை உலகத்தவா அறிந்துகொள்வதற்கு நம்மவர் ஆசியமொழி கள், ஐரோப்பிய மொழிகளில் பாண்டித்தியம் பெறுதல் அவசியமாகும்.

இந்தி, சீனம், யப்பானியம், இந்தோனேசியம் முதலிய மொழிகளில் பயிற்சி பெறுபவர் ஆசிய நாடுகளுக் கும், ஆங்கிலம் பிரெஞ்சு, ரோமன், ஸ்பானியம், றசியன் முதலிய மொழி பயில்வோர் ஐரோப்பிய அமெரிக்க நாடுக ளுக்கும் எம் பண்பாட்டை அறியச் செய்யலாம், தமிழ ருக்குப் பண்பாட்டைவிட மேலான சொத்து எதுவுமே இல்லை.

''பண்புடை யார்ப் பட்டுண்டுலகம் அதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்''.

## தனிநாயகத்துக்குச் சபாநாயகம் மிகை

முப்பதாண்டுகளுக்கு முன் சென்னைத் தமிழ்வளர்ச் சிக்கழகத்தார் தமிழ்நாட்டின் மதுரை, திருவாரூர், கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் மீன், புலி, வில், எழுதிய கொடியுயர்த்தித் தமிழ்த்தாய்க்குப் பெருவிழா எடுத்தார்கள். அந்தவரிசையில் நான்காம் விழாவினை 1951ம் ஆண்டின் ஏப்ரல் 29, 30, மே 1 ஆகிய நாட்களில் யாழ்ப்பாணத்தில் யாழ் எழுதிய கொடியுயர்த்திக் கோலாகலமாகக் கொண்டாடினுர்கள்.

பெரும் புலவரும் புரவலருமான சு. நடேசபிள்ளை அவர்களின் ஆதரவில் பரமேஸ்வரக் கல்லூரியில் நடை பெற்ற விழாவுக்கு இராமநாதன்கல்லூரி பெருவிருந் தளிக்கும் பெருமையும் பேறும் பெற்றிருந்தது. நடேச பிள்ளை சொன்னவற்றை இலங்கை அரசாங்கம் செய்து வந்தவர்க்கெல்லாம் வசதிகளை முட்டின்றி நிறைவேற் றியது. ஐந்நூறு அறிஞர்கள் தமிழ்நாட்டிலிருந்து வந் தார்கள். சூளிக்கரைப் பிச்சையப்பா மங்களவாத்திய மியம்பவும், வசந்தகுமாரி இசைபாடவும் வந்திருந்தார் கள். மைதானத்திலமைந்த பந்தரில் 50,000 பேர் அமர்ந்திருந்தார்கள் என்றுல் மிகையாகாது.

''இந்தியாவிலே காணமுடியாத இந்தியப் பண் பாட்டினை யாழ்ப்பாணத்திலேதான் காணலாம்'' என்று காந்தியடிகள் முன்னர் சொன்ன வாசகத்தைப் பாரத நாட்டினர் நேரிற்கண்டு ஆனந்தித்தனர். இராமநாதன் கல்லூரி மாணுக்கியர் செய்த உபசாரங்கள் வந்திருந் தோரை மலர்வித்தன. யாழ்ப்பாணத்துக் கலைக்காட்சி போல் வேறெங்கும் இடம்பெறவில்லையென்று பெரியவர் கள் கூறிக்கொண்டார்கள்.

சமணரும் பௌத்தரும் தமிழின் சுவைகண்டு அதனை வளர்த்தார்கள். முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் தமி ழுக்குப் பெருந்தொண்டு செய்யுமுன் வைணவர்களும் சைவரும் தமிழை வளர்த்தார்கள். ஆறு, வேறுசமயத்த வர்களும் தமிழொன்றுக்கே உலகறிய ஒப்பனைகள் செய் தார்கள்.

தமிழ்விழாவில் முஸ்லிம்கள் பேசினுர்கள், கிறிஸ்தவர் கள் பேசினுர்கள். கிறிஸ்தவரான தனிநாயக அடிகள் சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு என்பதுபற்றிப் பேசினுர் கள். ''லத்தின் சட்டத்துக்குரிய மொழியானல், இத்தா லியம் காதலுக்குரிய மொழியானல், ஆங்கிலம் வணிகத் துக்குரிய மொழியானல், தமிழ் பக்திக்குரிய மொழி'' என்று அவர் பேசியபோது கடல்போல் திரண்டிருந்த மக் கட் கூட்டம் மகிழ்ந்தாரவாரித்தது. ''முன்னர் அனுமன் குமுதன் முதலானேர் இராமபிரானுக்காக அமைத்த மலைப்பாலத்திலும் பார்க்க நம்மவர் இன்றமைத்துவரும் கலைப்பாலம் வலிமையானது'' என்று குறிப்பிட்டுப் பேசிய அடிகள் தமது பேச்சின் முடிவில் ''என்னை நன்ருக இறை வன் படைத்தனன் தன்னை நன்ருகத் தமிழ்செய்யுமாறே'' என்னும் திருமந்திரப் பாடலைப்பாடி அமர்ந்தார்.

அன்றைய மாலை நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை அவர்கள் தாமதித்து வந்தாரேனும், அவர் வருவதற்கு முன்னரே தனிநாயக அடிகள் தமக்குக் குறிப்பிட்ட நேரத்தில் பேச ஆரம்பித்து முடித்தார். இதனை நயமாகக் குறிப்பிட்ட தலைவர் அவர்கள், ''தனிநாயகம் பேசுவதானல் சபாநாயகம் மிகையாகும்'' என்று பேசி மகிழ்வைத்தார்.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழ் வளர்த்த.......

இதனையும் இதுபோன்ற பல நிகழ்ச்சிகளையும் கண்டும் கேட்டும் இன்புற்றிருந்த சோமலெ என்னும் செட்டியார் அவர்கள், தாமெழுதிய நான் கண்ட விழாக்கள் என்னும் நூலில், ''தமிழ்விழா மதுரையில் பிறந்தது, திருவாரூரில் தவழ்ந்தது, கோயம்புத்தூரில் எழுந்தது, யாழ்ப்பாணத் தில்தான் அது நடந்தது'' என்று நயம்படக் குறிப்பிட் டுள்ளார்.

## மகிழ்ச்சியுலக மண்டபத்தில் மகிழ்ச்சியாரவாரம்

சிங்கப்பூரிலுள்ள பெரியமண்டபமொன்றின் பெயரைத் தமிழிற் கூறுவதானால் மகிழ்ச்சியுலக மண்டபம் எனலாம். அங்கே இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் மங்களகர மான தைப்பொங்கல் தினத்தன்று மாலை பத்தாயிரம் மக்கள் கூடியிருந்த வேளையிலே தனிநாயக அடிகள் தமிழ் நாகரிகம்பற்றிப் பேசினார்.

இந்துநாகரிகத்தில் எழுபத்தைந்து வீதம் தமிழ் நாக ரிகம் என்று அவர் பேசியபோது, கேட்டிருந்தோர் அனை வரும் தோள்கள் பூரித்து மகிழ்ச்சியில் மலர்ந்து ஆரவாரித் தனர். உலக மொழிகளுள் பழைய மொழிகளான லத் தின், கிரேக்கத்திலும் பார்க்கத் தமிழ் தொன்மை யானது என்று அடிகளார் பேசியபோது ஆங்கிருந்த தமி ழர் ஆனந்தக்கண்ணீர் வடித்தனர்.



யாழ். நகர மண்டபத்தில் தனிநாயக அடிகளாரைப் பொதுமக்கள் சார்பில் மில்க்வைற் தொழிலதிபர் மாலைசூட்டி வரவேற்றல்.

## அடிகளாரின் கடைசிப்பணி

தனிநாயக அடிகளாரின் தமிழ்ப்பணிகளுள் அவர் கடைசியாகச்செய்த பணி தமிழ்மறை விருந்து என்னும் நூலை வெளியிட்டு வைத்தமையாகும். தமிழ்மறைக் கழகத் தலைவரும் ஊர்காவற்றுறைப் பிரதிநிதியுமான பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் எழுதிய இந் நூலை அண்மையில் வேலணையில் நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டில் அடிகளார் வெளியிட்டு முதற்பிரதியை மில்க்வைற் தொழிலதிபர் திருக்குறட் காவலர் திரு. கனக ராசாவிடம் வழங்கினார். மதுரைப் பல்கலைக்கழக உப வேந்தர் கலாநிதி சுப, மாணிக்கம் அவர்கள், காரைக் குடிப் பேராசிரியர் கலாநிதி சாரங்கபாணி அவர்கள், திரு. மெய்கண்டார் முதலாய பேரறிஞர்கள் மத்தியில் தளர்ச்சி மிகுதியால் தொழிலதிபர் கனகராசா அவர்களின் கையை இறுகப்பிடித்தவாறு அடிகளார் மேடையில் ஏறினார்.

தொழிலதிபர் கனகராசா அவர்களின் தமிழ்ப்பணியை யும், சமூகப் பணியையும் பாராட்டிய தனிநாயக அடிகள் உலகத் தமிழ் மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போது தொழிலதிபர் செய்த உதவிகளை நினைவுபடுத்தி அடுத்துவரும் மதுரை மகாநாட்டிலும் கட்டாயம் கலந்து கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தினார்.

தமிழாராய்ச்சி விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்து வதா விடுவதா என்று நிர்வாக சபையினர் ஈடாடிக் கொண்டிருந்த வேளையில் எவ்விதமும் நடத்தவேண்டும் என்று சொன்னவர்களுக்குப் பக்கபலமாக நின்று பலவித உதவிகள், உபகரிப்புகள் செய்த கனகராசா அவர்களின் பெருந் தமிழ்ப் பற்றையும் வள்ளன்மையையும் அடிகளார் நினைவுபடுத்தினார்.

வேறிடங்களில் நடைபெற்ற ஊர்வலங்கள் போலன் றித் தமிழ் வரலாற்று ஊர்வலங்களை உயிருள்ள வகையில் நடத்திய முறையை அடிகளார் மெச்சினார். சங்கிலியன் நாடகமேடை யாழ்ப்பாணத்து வீதிகள் எங்கும் உருண் டோடும் வகைசெய்து பல்லாயிரவர் தெருவோரங்களில் அணியணியாக நின்று கண்டு மகிழவைத்தவர் கனகராசா என்றார். அன்றி அழகிய பொலித்தீன் பையில் உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டுச் சின்னம் பொறித்து ஆயிரக் கணக்கில் விநியோகம் செய்த பெருந்தன்மையைப் போற்றினார்.

கோலாலம்பூர், சென்னை, பாரீஸ், யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் நடைபெற்ற விழா, அடுத்துவரும் தை மாதத்தில் திருவாலவாய் என்றும் மதுரையென்றும் கூடல் என்றும் வழங்கும் பாண்டியன் தலைநகரிலே நடக்கப் போகிறது. அடிகளார் எம்மத்தியில் இல்லையே என்ற கவலை ஒருபுறமாக, விழா நடைபெறும் குதூகலம் ஒருபுற மாக உள்ளன.

இவ்வாறாக அடிகளாரின் அரியபணிகளை நினைவு செய்துகொண்டு தமிழாராய்ச்சி விழா வெற்றிகரமாக நடைபெறுவதாக. தமிழ் வாழ்க! அடிகளார் புகழ் வாழ்க! தமிழர்தம் ஆர்வம் வாழ்க! என வாழ்த்துவோமாக. ★

★ துன்பங்கள் வருவதால் மனிதன் முன்னேறுகிறான் ★

# மாண்டுக்கிய உபநிடதம்

(தமிழாக்கம்: நவாலியூர் சோ. நடராசன்)

1. 'ஓம்' என்னும் அட்சரமே இது அனைத்தும் அதற்கு (இது) விளக்கம். இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் எல்லாம் இந்த ஓங்காரமே. இம்மூன்று காலத்தையும் கடந்து எது இருக்கிறதோ அதுவும் ஓங்காரமே.

குறிப்பு: பிரமத்தைக் குறிக்கும் இந்த ஓங்காரம் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற முக்காலத்து வெளிப்படையான பிரமத்தையும், வெளிப்படாது அவ்யக்தமாய் அதீதமாயுள்ள பரம்பொருளையும் குறிக்கும்.

2. இது அனைத்தும் பிரமம். இந்த ஆன்மாவும் பிரமமே. இந்த ஆன்மா நான்கு நிலைகளில் தங்குகிறது.

குறிப்பு: நான்கு நிலைகளாவன: சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம். சாக்கிரநிலை விழிப்புநிலை; அது விஸ்வம் என்று சொல்லப்படும். சொப்பனமான கனவுநிலை ''தைஜசம்'' எனப்படும். சுழுத்தி என்ற பேருறக்கநிலை ''பிராக்ஞம்'' எனப்படும் துரியம் என்ற நாலாவது நிலை ஆத்ம ஞான நிலை. சாக்கிரத்தைக் கனவுநிலையிலும், கனவைச் சுழுத்தியிலும் சுழுத்தியைத் துரியத்திலும் அமிழ்த்தி விடுவதால் துரியம் அறியப்படும். அமிழ்த்துதல் = மறையச் செய்தல்.

3. முதல் நிலையான சாக்கிரம் வைஸ்வாநரம். அது புறப்பொருள்களைக் காண்பது. அதற்கு ஏழு அங்கங்களும், பத்தொன்பது முகங்களுமுண்டு.

ஏழு அங்கங்களாவன:

| | | |
|---|---|---|
| தலை | ... | சுதேஜஸ் (நல்லொளி) |
| கண் | ... | விஸ்வரூபம் (அனைத்துவடிவு) |
| பிராணன் | ... | பலவகைப்பட்ட வழிகள் (பிருதக்வர்த்மா) |
| உடல் | ... | பஹுலம் (நிறைவாயுள்ளது) |
| சிறு நீர்ப்பை | ... | செல்வம் |
| பாதங்கள் | ... | பூமி |
| நெஞ்சு | ... | வேள்விமேடை |
| ரோமம் | ... | தர்ப்பைப்புல் |
| இருதயம் | ... | கார்கபத்தியம் எனும் தீ |
| மனம் | ... | அன்வாஹார்யபசனம் எனும் தீ |
| வாய் | ... | ஆஹவனீயம் எனும் தீ |

பத்தொன்பது வாய் (முகம்) என்பவை:

| | | |
|---|---|---|
| கன்மேந்திரியம் | ... | 5 |
| ஞானேந்திரியம் | ... | 5 |
| பிராண வாயுக்கள் | ... | 5 |

மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.

சாக்கிராவஸ்தை - வைஸ்வாநரம் எனப்படும் - விஸ்வத்திலுள்ள எல்லா நரர்களையும் தனுகரணபுவன போகங்களில் துய்ப்பிப்பதாலும், அதுவே எல்லா (விஸ்வ) நரர்களாயிருப்பதாலும் விஸ்வநர: (வைஸ்வாநர) எனப்பட்டது. சாக்கிரநிலை, மனிதன் இயல்பாக எடுத்த எடுப்பில் சிந்தனையின்றிப் பொருள்களைக் கண்ட கண்டவாறு தரிசிக்கும் நிலை. இங்கே கருத்தின்றிக் கண்டவற்றைக் காணுதல் விழிப்பு நிலை. கருத்து என்பது அனுமானம்; இக்காட்சியில் சிந்தித்தல் இல்லை; இது நேரடிக் காட்சி.

...தொடரும்

# தொகையகராதி - நான்கு

**கணம்**

உயிர்க்கணம் ... மென்கணம்
வன்கணம் ... இடைக்கணம்

**கணை**

மரக்கணை ... மலர்க்கணை
வடிகணை ... வைரக்கணை

**கதி**

தேவகதி ... மனிதகதி
விலங்கின்கதி ... நரககதி

**கரணம்**

மனம் ... புத்தி
சித்தம் ... அகங்காரம்

**காட்சி**

வாயிற்காட்சி ... மானதக்காட்சி
தன்வேதனைக் காட்சி ... யோகக்காட்சி

**காய்ச்சீர்**

தேமாங்காய் — புளிமாங்காய்
கருவிளங்காய் ... கூவிளங்காய்

**சங்கு**

இடம்புரி ... வலம்புரி
சலஞ்சலம் ... பாஞ்சசன்னியம்

## உங்களுக்குத் தெரியுமா? விடைகள்

1. வாஷிங்ரன் 2. மலாயா 3. சந்திரவேங்கட ராமன் 4. செங்கடகல 5. றெபேட் பியரி 6. காட்டெருமை 7. பதினைந்து அடி 8. நான்கு 9. ஸ்பானியம் 10. ரேஜா 11. அபின் யுத்தம் 12. தோடைமரம் அதிகமுள்ள நாடு



கிழக்கிலங்கை - திருக்கோணமலையில் றோட்டரி சங்கத்தாரின் வேண்டுகோளின் வண்ணம் அங்கே மில்க்வைற் தொழிலதிபர் அமைத்த பஸ்தரிப்பு நிலையத்து நிழல் மண்டபம்.



## ஒளவை அருந்தமிழ்

### 9. பழக்கமும் பிறவிக்குணமும்

பழக்கம் பெரிதா பரவணி பெரிதா என்று நாடோடியாகக் கேட்பார்கள். பழக்கத்தால், அப்பியாசத்தால் எதனையும் செய்து முடிக்கலாமென்று கூறுவார்கள். பிறவிக் குணத்தை, இயற்கை அமைவை மாற்றமுடியுமா என்று கேட்பார்கள். மீன்குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுத்தவர் யாவர்? சிலந்திக்கு வலைபின்னப் பழக்கியவர் யாவர்? நாய்க்குட்டிக்குக் குரைக்கப் பழக்கியவர் யாவர்? இப்படியே இயற்கை நிகழ்வுகள் பல பழக்க விசேடத்தாலும் பிறவிக்குணத்தாலும் நிகழ்ந்துகொண்டேயிருக்கின்றன. இவை இவ்வாறாக நாம் நமக்குள்ளே தருக்கித் திரிவதை ஒளவையார் கண்டு நம்மைத் திருத்துவதற்காகக் கூறுகின்றார்.

படம் வரைவது கைப்பழக்கத்தால் சிறப்படையும், சிறந்த தமிழின் தேர்ச்சி நாவின் பயிற்சியினால் உண்டாகிறது, நல்ல பொருள் பொதிந்த கல்வித்தேர்ச்சி உள்ளப் பயிற்சியினால் உண்டாகும். தினந்தோறும் அதிகதூரம் நடத்தல், நடந்து பழகுவதால் ஏற்படக்கூடியது, சிநேகத் தன்மையும் இரக்கமும் கொடுக்கும் குணமும் அவரவர் கருவிலமைந்த இயல்புகளாம்.

சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் — நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

## தபாற்கந்தோர் சேமிப்பு

ஆனமுதலில் அதிகம் செலவானால் மானமழிந்து மதிகெட்டு வாழவேண்டும் என்று கருதி மாதம் மாதம் ஏதாவது கொஞ்சம், கொஞ்சம் மிச்சம் பிடித்துச் சேமிப்பது நல்லது. தபாற்கந்தோர்மூலம் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் சேர்த்துவைக்கும் பழக்கம் 16-4-1885 முதல் நடைமுறைக்கு வந்தது. இன்று தேசிய சேமிப்பு இயக்கம் நூற்றுக்கு 18%, 15% எனப் பெருவட்டி கொடுக்கிறது. பிள்ளைகளின் எதிர்காலத்தை உத்தேசித்து இப்போதே கொஞ்சம் சேமித்துவைத்தல் நல்லது.

தபாற்கந்தோர் சேமிப்பு முறையை இலங்கையில் சட்டபூர்வமாகக் கொண்டுவந்தவர் சேர் இராமநாதன் அவர்களாவர். அவர் 10-11-1880ல் இதனைச் சட்டசபையிற் பிரேரித்தார். இதனால் ஏழைகளுக்கும் தொழிலாளருக்கும் நன்மை உண்டாகுமென்று விளக்கினார். சிறுதுளி பெருவெள்ளம் என்பதன் கருத்தை அருமையாக விளக்கிப் பேசியதை எல்லோரும் கேட்டு வியந்தனர். ஆனால் அதிகாரிகள் ஒருவருட காலமாக எதுவுஞ் செய்யாமையால் இராமநாதன் மறுபடியும் 1881 ஐப்பசியில் இதனைப் பிரேரித்தார்.

## லபுகம நீர்த்தேக்கம்

கொழும்பு வாசிகளுக்கு நாளாந்தத் தேவைகளுக்கு நன்னீர் வழங்கும் நீர்த்தேக்கம் லபுகம என வழங்குகிறது. இத்தேக்கத்தை ஆக்கிய ஆங்கிலேய அறிவாளி, இதில் நிரம்பிய நீருடன் பயன்படவைத்த நாள் 1886 ஆம் ஆண்டில் ஆவணி மாதத்தில் ஒருநாளிலாகும். இன்னும் ஆறுண்டுக் காலத்தில் லபுகம நீர்த்தேக்கத்துக்கு நூறுண்டு நடைபெறும்.

## அரிச்சுவடி ஏடுகள்

நவராத்திரி காலத்தில் மகாதசமி தினத்தில் சைவாசார முறையில் பிள்ளைகளுக்கு வித்தியாரம்பம் செய்து வைக்கவிரும்பும், மேல் மாகாணம், கிழக்கு மாகாணம், மத்திய மாகாணம் ஆகிய பிரதேசத்தவர்கள், கல்லூரிகள், பாடசாலைகள், சபைகள், மன்றங்கள் மூலம் அரிச்சுவடி ஏடுகளுக்கு முன்கூட்டியே விண்ணப்பஞ் செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

மில்க்வைற் சமயசேவை
தபாற்பெட்டி 77,
யாழ்ப்பாணம்.

திருஆலவாய்,
1-10-80.

## சென்ற நூற்றாண்டில் வருடப்பிறப்பு விடுமுறை

ஆண்டுதோறும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் வருடப்பிறப்புக் கொண்டாடி மகிழ்கின்றார்கள். அன்று அவரவருக்குப் பொருத்தமான நாள்களில் பொதுவிடுமுறை நாளாகவும் அமைகிறது. இத்தகைய கணிப்பு 31-3-1885 ஆம் நாள் முதல் சட்டமாயது. அதற்குமுன் இவர்கள் விடுமுறை கொண்டாட முடியாதவகையில் புது வருடப்பிறப்பு வேலைநாளாக விளங்கியது.


**மில்க்வைற் செய்தி**

மில்க்வைற் செய்தி தேவையானோர் பின்வருவன வற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள். நாங்கள் தபாற்செலவு கட்டிச் செய்தியை அனுப்புவோம்.

நீலசோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2,
பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் ,, 2,
சலவைப் பவுடர் மேலுறை 2

மில்க்வைற் த. பெ. இல 77, யாழ்ப்பாணம்.


தனது உள்ளத் தூய்மையை நிலைநாட்டுவதற்கு விரும்புமெவனும் உடைமை எல்லாவற்றையும் இழப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

— மகாத்மா காந்தி

★ சிருஷ்டி முழுவதும் இறைவனின் பெரிய குடும்பம் ★

## உங்களுக்குத் தெரியுமா?

விடைகள் வேறிடத்தில்

1. உலக வங்கி அமைந்துள்ள இடம்
2. உலகில் றப்பர் அதிகம் விளையும் நாடு
3. லெனின் பரிசுபெற்ற இந்திய விஞ்ஞானி
4. கண்டியின் பழைய பெயர்
5. வடதுருவத்தைக் கண்டவர்
6. புலியை எதிர்க்கக்கூடிய தாவரபட்சணி
7. அணில் பாயக்கூடிய தூரம்
8. வியாழக் கிரகத்தின் சந்திரர்களின் தொகை
9. வெனிசூலா நாட்டின் மொழி
10. அத்தர் வடிக்க உபயோகமாகும் மலர்
11. சீனருக்கும் ஆங்கிலேயருக்கும் நடந்த யுத்தத்தின் பெயர்

## அடுக்கு மொழி

பாயும் படுக்கையும்
பாராட்டிச் சீராட்டி
பாலும் தேனும்
பாலும் பழமும்
பாலூட்டித் தாலாட்டி
பாவமும் பழியும்
பாவலரும் நாவலரும்
பாவையும் பந்தும்
பிச்சுப் பிடுங்கி
பிணக்கும் பூசலும்
பிய்த்துப் பிடுங்கி
பிரிவும் பிளவும்
பில்லி சூனியம்
பிள்ளை குட்டிகள்
பிளவும் பூசலும்
பிறந்து இறந்து
பிறப்பு வளர்ப்பு
பின்னிப் பிணைந்து

கண்ணுக்கு அசுத்தமாய்த் தோன்றுவதுதானே அசுத்தம்? வெள்ளையான பொருளின்மேல் ஒரு சிறிது அழுக்குப் பட்டாலும் எமக்குச் சினமுண்டாகிறது; ஆனல், கறுத்த ஒரு பொருளின் மேல் எவ்வளவு அழுக்கு இருந்தாலும் அதைப்பற்றி யாம் சிறிதுங் கவலைப்படோம்.

—மகாத்மா காந்தி

## ஞானிகள்

### கணிகன் பூங்குன்றனர்

(தனிநாயக அடிகளார் அதிகமாக எடுத்தாளும் கணிகன் பூங்குன்றனரின் புறநானூற்றுப் பாடலும் அதன் மொழிபெயர்ப்பும்: மொழிபெயர்த்தவர்: ஜி. யூ. போப்)

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னு தென்றலும் இலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானது
கல்பொரு திரங்கு மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆர்உயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறலோர்
காட்சியிற் தெளிந்தனம் ஆகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!

இதன் பொருள்: எமக்கு எல்லாம் ஊர், எல்லாரும் சுற்றத்தார், கேடும் ஆக்கமும் தாமே வரினல்லது பிறர்தர வாரா, நோதலும் அது தீர்தலும் அவற்றையொப்பத் தாமே வருவன, சாதலும் புதிதன்று, கருவில் தோன்றிய நாளே தொடங்கியுள்ளது, வாழ்தலை இனிதென்று உவந்ததுமிலம், ஒரு வெறுப்புவந்தவிடத்து இன்னுதென்றிருத்தலும் இலம், மின்னுடனே மழை குளிர்ந்த துளியைப் பெய்தலான் அமையாது கல்லையலைத்து ஒலிக்கும் வளவிய பேர்யாற்று நீரின் வழியே போகும் மிதவைபோல் அரியவுயிர் ஊழின்வழியே படும் என்பது நன்மைக்கூறுபாடறிவோர் கூறிய நூலாலே தெளிந்தேமாகலான், நன்மையான் மிக்கவரை மதித்தலுமிலேம், சிறியோரைப் பழித்தல் அம்மதித்தலினுமிலேம்.

## SAGES

*Singer of the flowery hill, court poet and friend of Koperum Cholan of Uraiyur.*

Translation: **G. U. Pope**

To us all towns are one all men are our kin
Lifes good comes not from others' gift, no ill
Man's pain and pain's relief are from within
Death's no new thing, no do our bosoms thrill
When joyous' life seems like a lucious draught,
When grieved, we patient suffer for we deem
This much - praised life of ours a fragile raft
Borne down the waters of some mountain stream
That over huge bouiders roaring seeks the plain
Tho' storms with lightning's flash from darkend skies
Decend, the raft goes on as fates ordain
Thus have we seen in visions of the wise!
We marvel not at greatness of the great;
Still less despise we men of low estate.

★ நிகழ்வதைச் சகித்துக்கொள்ளப் பழகியவன் சிறந்தவன் ★



# மகாத்மா காந்தியடிகளை நினைக்கவேண்டுமா?

★

விரும்பினால் நினைக்கலாம். விரும்பாவிட்டால் மறக்கலாம். நினைக்கத்தான் வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. அத்தகைய நிபந்தனைகளைக்காந்தியடிகளே விரும்பியிருக்கமாட்டார்.

காந்தியடிகள் சத்தியம், அகிம்சை என்பனவற்றில் அவர் அசைக்கமுடியாத நம்பிக்கைகொண்டிருந்தார். கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று அவர் உறுதியாக நம்பினார். சரியான காரியத்தைச் செய்யும்வண்ணம் மனிதனை நிர்ப்பந்திக்கும் சக்தி கடவுளேதான் என்று நம்பினார். காந்தியிடம் ஏதாவது வலிமை, வல்லமை, ஆற்றல் இருந்தால் அவை கடவுள் நம்பிக்கையால் உண்டானவை என்பர். கடவுளின் ஓர் அற்ப கருவியே தாம் என்றார்.

காந்தியின் எண்ணம், சொல், செயல் என்னும் மூன்றிலும் சத்தியமும் அகிம்சையும் இடம்பெற்றிருந்தன. சத்தியமும் அகிம்சையும் ஒன்றே என்பர். சத்தியமே கடவுள் என்றும் துணிவாகக் கூறினார். சத்தியமும் அகிம்சையும் வாழ்வின் நியதிகள் என்றதோடு அவை நாணயத்தின் இருபுறங்கள் எனவும் நயம்படக் கூறினார். அகிம்சை முனிவர்களுக்கு மாத்திரமல்ல சாதாரண மக்களுக்கும் உரியது என்று போதித்தார். காந்தியிடம் கோழைத்தனமோ பலவீனமோ இருக்கவில்லை. பெரிய தளபதிகள், இராசதந்திரிகள், பிரதமர்கள், பிரமுகர்கள் காந்திக்கு முன்னால் சாதுக்களாக அடக்கவொடுக்கத்தோடு பணிந்துநிற்கும் நிலையில், அவர் பெரிய ஆற்றல் வாய்ந்தவர்.

காந்தி குரோதம், பகை என்பன பாராட்டக்கூடாதவை என்றார். எவனையும் விரோதியாக எண்ணக்கூடாது என்றார். எல்லோருக்கும் ஒழுக்கம் வேண்டும் என்றார். வாழ்க்கையில் கஷ்டம் இருக்கத்தான் செய்யும் எனக்கருதிய அவர் அவ்வேளைகளில் அன்பினைக் கைவிடலாகாது என்றார். நாமே கஷ்டத்தை ஏற்று அனுபவித்தல் நல்லது என்றார். பலாத்காரம் பாதுகாப்பினை அளிக்காது என்றவர், மனவுறுதியால் ஏற்படும் வலிமை பெரிது என்றார். அவர் சத்திய உபாசகர், அவர் எதனையும் மறைக்காமல் பகிரங்கமாகவே வாழ்ந்தவர்.

காந்தியின் உணர்ச்சி சத்திய ஆவேசம் என்பர். அதனால்தான் அவர் மற்றையவர்களைத் தம்வழியில் கவர்ந்தார். அவரின் அறமும் மதமும் ஒன்றே. அவர் தம்மைக் கர்மயோகி என்றே கருதிக் கடமை புரிந்தார். தம்மதத்தைப் போலப் பிறமதங்களையும் மதித்த மனிதருள் தலையாய மனிதர் காந்தி என்பதை உலகப் புகழ்பெற்ற ஒருவர் வாக்கால் அறியலாம். ''உலகிற் சிறந்த கிறிஸ்தவன் யாரென்றால் இந்துவாயிருந்த காந்தியே'' என்பது அப்பெரியார் கூற்று. சத்தியம் என்பது எந்த மதத்துக்கும் ஏகபோக உரிமைப் பொருளல்ல என்று காந்தி கூறியுள்ளார்.

மனிதகுலத்துக்குச் சேவை செய்வதன் மூலமாகக் கடவுளைக் காணமுயன்றவர் காந்தி. கடவுள் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் உறைகிறார் என்று பூரணமாக நம்பினார். மதமாற்றத்தை அவர் அறவே வெறுத்தார். பிரார்த்தனை செய்தல் மனிதவாழ்வின் கருப்பொருள் என்று கருதினார்,

எல்லோரும் மேம்படவேண்டும் என்ற கருத்தில் அவர் சர்வோதயம் பேசினார். Unto the last என்பது அவர் இளமையில் படித்த நூல். சுரண்டல் முறையை அவர் வெறுத்தார். முதலாளிகளை அவர் வைதது கிடையாது. முதலாளி ஒழிக என்று கத்துவது அறியாமை என்றும் அது வெறும் கோஷம் என்றும் விளக்கினார். உடலுழைப்பால் பெற முடியாதவற்றுக்கு மாத்திரம் இயந்திரங்களை உபயோகிக்கலாம் என்றார்.

மனிதன் உழைத்து உண்ணவேண்டும் என்றும் உழைக்காமல் உண்பவன் திருடன் என்றும் கூறினார். இக்கருத்துக்கு ஆங்கிலேய ரஸ்கினும், ரஷ்ய ரோல்ஸ்ரோயும் அரண்செய்தனர். பகவத் கீதையில் யக்ஞம் என்பதை உடல் உழைப்பு என்று காந்தி விளக்கினார்.

இங்ஙனம் எத்தனையோ போதனைகளைக் கூறியும் சாதனைகளைச் செய்தும் வழிகாட்டிய ஒளிவிளக்கை நினைக்கவேண்டுமா? மறந்துவிடவேண்டுமா? அது உங்கள் விருப்பத்தில் எழுந்த தீர்மானம்.

## வழக்கிலுள்ள வடமொழிகள் சில

| | |
|---|---|
| தாநம் | — இடம், இருக்கை |
| தானம் | — ஈகை, கொடை, அறம் |
| தாநாதிபதி | — படைத் தலைவன் |
| தாவரம் | — நிற்பன, அசையாப்பொருள் |
| தாபித்தல் | — நிறுவுதல், நாட்டுதல் |
| தாமதம் | — தாழ்த்தல் |
| தாமம் | — மாலை |
| தாமிரம் | — செம்பு |
| தாரகம் | — துணை |
| தாரகை | — விண்மீன் |
| தாரணம் | — அணிதல், பூணுதல் |
| தாரணை | — நினைவொருமை |
| தாரதம்மியம் | — ஏற்றத்தாழ்வு |
| தாரம் | — மனைவி |
| தாரை | — ஒழுக்கு |
| தானியம் | — கூலம் |

★ சிரத்தையை இழந்தவன் அனைத்தையும் இழந்தவனாவன் ★

## குன்றின் மேலிட்ட தீபம்

குன்றின் மேலிட்ட தீபம்போல் மலைநாட்டில் மாத்தளை மாவட்டத்தில் இந்து இளைஞர் எழுச்சிவிழா சென்ற 20, 21, 22, ஆம் நாட்களில் வெகு சிறப்பாக நடைபெற்றது. மலைநாடெங்கும் அருள் வழங்கும் அன்னை முத்துமாரி ஆலயத்தின் கலியாண மண்டபத்தில் நடைபெற்ற பெருவிழாவில் மாவட்டத்தின் முப்பது பாடசாலைகள்வரை திரண்டு வந்திருந்தன.

மாணக்கர் மாணக்கியரின் கலை நிகழ்ச்சிகள் பொது மக்களைப் பெரிதும் கவர்ந்தன. மலையக மக்களின் நாளாந்த வாழ்வைப் படம் பிடித்தாற்போல் இளமட்டங்கள் நகைச்சுவை நாடகங்கள் ஓரங்க முறையில் நடித்தார்கள். நாட்டியங்கள் பாடல்கள் நல்லமுறையில் நடைபெற்றனவாயினும் பின்னணி பக்கவாத்தியம் முதலியன பற்றுக்குறையாக இருந்தன. விழாவைச் சிறப்புற நடத்திய இளைஞர்கள் சார்பில் மாத்தளை சோமு குற்றங்குறைகளைச் சுட்டிக்காட்டுமாறு கேட்டதற்காக இதனை எழுத வேண்டியதாயிற்று. அடுத்துவரும் விழாக்களில் ஆவன செய்வார்களாக.

சமய நிகழ்ச்சிகளுள் பேச்சு, மனனம், கட்டுரை முதலியவற்றிற் பரிசுபெற்ற பிள்ளைகளுக்குப் பரிசுகளை வழங்கிய மில்க்வைற் தொழிலதிபர் நேரில் கலந்து கொண்டமைக்கு மலையகப் பெரியவர்கள் நன்றி தெரிவித்தார்கள்.

குன்றின் மேலிட்ட தீபம் போல் மாத்தளையில் இந்து இளைஞர் கொளுத்திய ஆர்வம் மலையக மக்கள் வாழ்வை மலரச் செய்து ஒளியூட்டுவதாக.



## *Divine Life for Children*

Swami Sivananda

## God is the Centre

God is the aim of all religions. Every religion points out the way to attain God. God is the central topic of every religion.

Do not fight with your Christian friends. Do not fight with your Muslim friends. Their religions also lead them to God just as your religion does. You can reach the same destination by travelling through any of the paths leading to it. "All roads lead to God" Bear this in mind.

கோண்டாவில் க. வைத்தியலிங்கம் தம்பதிகளின் மைந்தர் இலங்கை வங்கி மன்னார்க் கிளை, ஸ்கந்தவரோதயன் அவர்களுக்கும்,

இணுவில் அண்ணா தொழிலகம் நடராசா பிறதர்ஸ் சு. பொ. நடராசா, சு. பொ. விவேகானந்தன் ஆகியோரின் கனிஷ்ட சகோதரியும் பொன்னையா தம்பதிகளின் புதல்வியுமான ஜெயலக்சுமி அவர்களுக்கும்.

இணுவில் கந்தசுவாமி கோயிலில் 10-9-80 புதன் கிழமையிரவு திருமணம் நிறைவேறியது.

தம்பதிகள் பேறுகள் பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைத் துதித்து, மணமக்களை வாழ்த்துகிறோம்.

**தம்பதிகள்**  **வாழ்க**

இரணை இலுப்பைக்குளம் இளைப்பாறிய உடையார் நெ. பாக்கியநாதன் தம்பதிகளின் மைந்தரும், (கொழும்பு கோட்ஸ் அஞ்சல்) உதவி அதிபருமான யோகநாதன் அவர்களுக்கும்.

புளியங்கூடல் சபாரத்தினம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய உதவி ஆசிரியையுமான கமலாம்பிகை அவர்களுக்கும் 10-9-80 புதன்கிழமை திருக்கேதீஸ்வரத்தில் திருமணம் நிறைவேறியது. கௌரியம்பாள் சமேத திருக்கேதீஸ்வரப் பெருமான் திருவருளால் இவர்கள் வாழ்வாங்கு வாழப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

## பொன்விழாப் பொலிவு

இராமகிருஷ்ண சங்கத்தின் கொழும்புக் கிளை ஐம்பதாண்டுகள் கண்ட பெருமையில் பொன் விழாக் கொண்டாடிப் பூரிக்கும் வேளையில் ஐம்பதாண்டுகள் கண்ட முதுமையுள்ள மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம் தங்கள் வாழ்த்தைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.

உலகப் புகழ்பெற்ற இராமகிருஷ்ண மடங்களின் சேவை கொழும்பிலும் பரவலாகக் கிடைக்கத் துறவு பூண்ட சுவாமி பிரேமாத்மானந்த அவர்களும் ஐம்பதாண்டு அரும்பணி புரிந்த அனுபவமும் ஒன்று சேர்வது அதிசயமாகிறது.

மடத்தையும் மடாதிபதியையும் மனநிறைவோடு வணங்கி, மற்றொரு சுவாமிகள் மட்டக்களப்பில் கல்லடி உப்போடையில் தாயாய், தந்தையாய், குருவாய் நூற்றுக்கணக்கான இளைஞரை மனிதராக உருவாக்கும் மகத்தான பணியை மனமார நினைந்து அவரையும் வணங்கி, மக்கள் வாழ அவர் வாழ்கவென வாழ்த்துகிறோம். வணக்கம்.

★ வெறுப்பும் சினமும் உள்ளவன் வீரனாகமாட்டான் ★

எங்கள் நீலம் கலந்த நிகரில்லாத
சோப்புக்கு அடுத்ததாகவுள்ளது
சிக்கனச் சலவைக்குச் சிறந்த




மில்க்வைற் பார் சோப்

சிக்கனச் சலவைக்கு
மெத்தவும் உபயோகமான பார் சோப்பை
நீங்கள் விரும்பிய அளவில் வெட்டி
வேண்டும்போது பாவித்துக்கொள்ளலாம்.

உடைகளைத் தூய்மைசெய்வதில் நிகரில்லாதது

குறிப்பு: இரண்டு பார் சோப் மேலுறைகளுக்கு ஒரு மில்க்வைற் செய்தி, அல்லது ஒரு மில்க்வைற் வெளியீடு இலவசமாய்க் கிடைக்கும்.

# மன்னூரில் சைவத் திருமுறைவிழா

தேவாரம் பாடப்பெற்ற புண்ணிய பூமியாகிய மாந்தை என்னும் மாதோட்டத்தினைத் தன்னகத்தடக்கிய மன்னூரில் அனைவரையும் ஒன்று திரட்டிய இந்துக்களின் பெருவிழா உப்புக்குளம் சித்திவிநாயகர் ஆலயத்தில் விசேட பூசையுடன் ஆரம்பித்தது. திருமுறை ஏடுகளையும், குரவர் நால்வர் திருவுருவப் படங்களையும் ஊர்வலமாக எடுத்துச்சென்ற உத்தியோகத்தரின் ஆர்வம் ஒன்றே விழாவின் அமைவைக் காட்டப் போதுமானது.

மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் திரு. செ. இராசதுரை அவர்களின் வருகையும் பிரதேச அமைச்சர், தொகுதிப் பிரதிநிதி ஆகியோரின் ஒத்துழைப்பும் விழாவை வெகுவாக ஒளிபெறச் செய்தன. நல்லை ஆதீன முதல்வர் நடுநாயகமாக எழுந்தருளி ஆசிவழங்க மில்க்வைற் தொழிலதிபர் கனகராசர் அவர்கள் மன்னூர் இந்துசமய வளர்ச்சிச் சங்கக் கொடியை ஏற்றிவைத்தார். மாண்புமிகு மந்திரியார் இராசதுரை அவர்களின் நீண்டபேச்சு மக்களிடையே பெரிய உற்சாகத்தை ஊட்டியது. மதத்தால் வேறுபாடு காட்டாத தொகுதிப் பிரதிநிதி உயர்திரு. சூசைதாசன் அவர்கள் ஞானப்பழமான காரைக்காலம்மையாரில் தொட்டுத் தமிழ்க் கலாச்சாரம் பற்றிப் பேசியபோது மக்கள் மகிழ்ச்சியில் மலர்ந்தார்கள். மாவட்ட மந்திரியார் முஸ்லிம் பெருமகனாராயிருந்தபோதும் விழாவில் பங்கு பற்றி ஆதரவு செய்வதாகக் கூறியமை பெரிய உற்சாகமாக அமைந்தது. சுருங்கக்கூறின் மன்னூர்த் திருமுறை விழாவில் எல்லா மதத்தவரும் எல்லா மாகாணத்தவரும் எவ்வித வேறுபாடும் கருதாது கூடியிருந்தனர். மன்னூரிற் கடமையாற்றும் பல்வேறு திணைக்களத்துப் பொறுப்பாளர் ஊழியர் பலரும் பங்குபற்றிச் சிறப்பித்த பெருமையைப் பாராட்டுகிறோம். அவர்கள் எல்லோருக்கும் கௌரியம்பாள் சமேத திருக்கேதீச்சரப்பெருமான் திருவருள் உரியதாகுக.

## பயன்தரும் பப்பாளிமரம்

பப்பாப்பழத்தின் சுவையையும், அதன் மகிமையையும், அதன் போஷாக்குத் தன்மையையும் நன்கறிந்தும் நம்மவர் அதனைப் பெருமளவில் பயிர்செய்யாமையால் அதன் பற்றுக்குறை எம்மைப் பாதிக்கின்றது.

சாதாரணமாக எல்லா நிலங்களிலும் எளிதாக உண்டாகக்கூடிய பப்பாமரம் வரட்சியைத் தாங்குவதோடு வருடமுழுவதும் பயன்தருவது. நல்ல விலை தருவது. பப்பா மரங்களை முறையாக நாட்டி நல்ல வருமானம் பெறலாம் என்பதை ஒரு சிலர் அறிந்திருக்கிறார்கள்.

கட்டையினத்துப் பப்பா மரங்களை வீட்டு வளவின் நடைபாதையோரங்களிலும் பின் கொல்லைப் புறத்தும் மதில் ஓரங்களிலும் நன்கு பயிரிடலாம். பயன் பெறலாம்.

பப்பாமரத்தின் பழங்களேயன்றிக் காய்களும் கறி சமைக்கப் பயன்படுகிறது. எந்த நேரத்திலும் எவ்வளவாயினும் உண்பதால் பப்பாப்பழத்தால் எவ்வித துன்பமும் உண்டாகாது. எல்லா வயதினருக்கும் ஏற்ற சுவையுள்ள பழம் பப்பாப்பழம்.

கிழக்குநாடுகளில் மிக வேகமாக முன்னேறிவரும் மலேயாவில் கோலாலம்பூரிலிருந்து வெளிவரும் உதயம் என்னும் தமிழ்ச் சஞ்சிகையில், பப்பாளி என்னும் தலைப்பில் வெளிவந்த கட்டுரையில் அரிய கருத்துக்கள், ஆலோசனைகள் இடம்பெற்றுள்ளன.

சமைப்பதற்கு நண்பன்!
புசிப்பதற்கும் தோழன்!!
வருவாய்க்கும் கூட்டாளி!!!

நாம் உண்ணும் உணவு சமிபாடாவதற்குப் பப்பாப்பழம் உதவிசெய்கிறது. உடலுக்கு ஊட்டத்தையும் மிதமான உஷ்ணத்தையும் ஊட்டுவதோடு தேக ஆரோக்கியத்தையும் தருகிறது.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-10-80.